Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ACC No. 44026

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய

அருள்நெறி

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய அருள்நெறி

கடவுள் சர்வ ஜீவதயாபரர், சர்வ வல்லபம் உடையவர். ஆகையால் அவர் நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக்கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய 'அருள்' விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் 'கடவுள் விளக்கம்' விசேஷமாயிருக்கும் மற்றவர்களிடத்தில் காரியப்படாது.

ஆகவே கடவுள் திருவருளைப் பெறுவதற்கு நம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் அருளிய இந்த அருள் நெறியினை கடைப்பிடித்து உய்வோமாக!

Acc-No - 44026
Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

4/5

1. ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது என்? எனில்:

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற **ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்று** அறிய வேண்டும்.

2. ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்வது எப்படி? என்றறிய வேண்டில்:-

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக **ஆன்ம உருக்கம்,**

Koviloor Digital Library

காருண்யம் உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய **அருள்** வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்; அத்திருவருள் விளங்கவே **கடவுள் இன்பம்** அனுபவமாகிப் பூரணமாகும். அவ்வனுபவம் பூரணமாதலே **கடவுள் வழிபாடு** என்று அறிய வேண்டும்.

3. ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்படுவது எப்படி? என்றறிய வேண்டில்:–

தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக

Koviloor Digital Library

4/5

உண்டாக அதனை உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவது போல், **கடவுள் விளக்கமாகிய அருள்** வெளிப்படும் என்று அறிய வேண்டும்.

5. ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகும்? என்னில்:

ஜீவர்கள் **பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை** இவைகளால், துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும், கேட்ட போதாயினும், இவ்வாறு உண்டாகும் என்று அறிந்த போதாயினும், **ஆன்ம உருக்கம்** உண்டாகும் என்று அறிய வேண்டும்.

Koviloor Digital Library

6\. ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் **கடவுள் அருளைப்** பெறக் கூடுமல்லது, வேறு எந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல் வேண்டும்.

7\. **ஜீவகாருண்யம் விளங்கும் போது** அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகார சத்தி விளங்கும். அந்த உபகார சத்தியால் **எல்லா நன்மைகளும் தோன்றும்.**

8\. **ஜீவகாருண்யம் மறையும்போது** அறிவும் அன்பும் உடனாக மறையும்; அதனால் உபகாரசத்தி மறையும். உபகாரசத்தி மறையவே **எல்லாத் தீமைகளும் தோன்றும்.**

Koviloor Digital Library

9. ஆகலின், புண்ணியம் என்பது ஜீவகாருண்யமொன்றே என்றும், பாவம் என்பது ஜீவகாருண்யம் இல்லாமையொன்றே என்றும் அறியப்படும்.

10. அவரவர் செய்த நன்மை, தீமைகள் அவரவரைச் சேரும் அல்லது வேறிடத்தில் போகாது என்பதை உண்மையாக நம்பி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்த வேண்டும்.

11. பிற உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தி அடைவதற்கும் சித்தி அடைவதற்கும் முதற்படியாய் இருக்கின்றது. ஆதலால், இதைப் (ஜீவகாருண்யத்தை) பாதுகாத்தல் வேண்டும்.

Koviloor Digital Library

12. ஜீவகாருண்ய ஒழுக்கம் இல்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்களும், கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரம் ஆகார்கள் அவர்களை ஆன்ம விளக்கம் உள்ளவர்களாகவும் நினைக்கப் படாது; **ஜீவகாருண்யம் இல்லாது செய்யப்படுகிற செய்கைகள் எல்லாம் பிரயோஜனம் இல்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகும்** என்று அறிய வேண்டும்.

13. அறிவு விளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் **ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு** என்று அறியப்படும்.

Koviloor Digital Library

14. நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவர் எழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினால் அல்லது வேறு வகையில் அடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையில் வராது. **ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு.** ஜீவகாருண்யம் உண்டானால் அன்பு உண்டாகும். அன்புண்டானால் அருளுண்டாகும். அருளுண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

"ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்."

Koviloor Digital Library

மாமிச உணவை மறுப்பதே மனித நெறி

மனிதன் பிற உயிர்களைக் கொன்று அதன் மாமிசத்தை உண்பது கடவுள் அருளுக்கு முற்றிலும் விரோதம் ஆகும். தாவர உணவே ஏற்புடையதாகும்.

வித்து, காய், கனிகளில் உயிர் இல்லையா?

மனிதன் கை, கால், விரல்களில் உள்ள நகங்களையும், முடிகளையும் வெட்டும்போது எவ்வாறு துன்பம் ஏற்படுவதில்லையோ அதே போல் செடி, கொடி, மரம் முதலிய தாவரங்களில் உள்ள வித்து, காய்,

Koviloor Digital Library

கனி, கீரை வகைகளை பறித்து உண்ணுவதால் அவைகளுக்கு துன்பம் ஏற்படுவதில்லை. மண், நீர், வித்து முதலிய மூன்றும் சேரும் பொழுது தான் உயிர் உண்டாவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. வித்து, காய், கனிகளில் உயிர் கிடையாது. ஆதலால் தாவர உணவே மனிதனுக்கு உகந்த உணவு.

ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமேயல்ல என்றும், **கடவுள் சம்மதமும் அல்ல** என்றும், இயற்கைக்கு முழு விரோதம் என்றும் அறிய வேண்டும்.

Koviloor Digital Library

ஜீவ இம்சை நேரிடும் காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடைசெய்தல் வேண்டும்.

ஓர் உடல் என்பது அந்த உயிர் குடியிருக்கும் வீடு என்பதை மறந்து விடலாகாது.

"சிறு தெய்வங்கள் துன்பம் செய்துவிடும் என்று அஞ்சி மக்கள் அறியாமையால் பல தெய்வங்களின் பெயரைச் சொல்லி அச்சிறு தெய்வங்களுக்கு பலிகொடுக்க பன்றி, ஆடு, கோழி, எருமைக்கடா முதலியவற்றை அலங்கரித்து பலியிட போவதைப் பார்த்து மனம் நொந்து நடுங்கினேன்."

- திருவருட்பா பாடல் எண்.275

Koviloor Digital Library

நன்மை தீமை என்பவை யாவை?

நன்மை தீமை என்பவை **புண்ணிய பாவம்.**

புண்ணியம் என்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும் பின் சுகமாயும் விளங்கும்.

பாவமென்பது ஆரம்பத்தில் சுக மாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

மேலும் நாம் செய்யும் பாவங்களே நமது துன்பங்களுக்குக் காரணமாகும். பாவங்களால் வருவதே துன்பங்கள்.

பாவங்கள் எவ்வாறு நம்மை வந்து அடைகின்றன?

மனம், வாக்கு, உடல் என்னும் மூன்றினால் நம்மை வந்தடைகின்றது.

Koviloor Digital Library

மனத்தினால் அடையும் பாவங்கள்:

1. பிறர் மனைவியை தனதாக்க நினைத்தல்.
2. பிறர் சொத்தை கிரகிக்க நினைத்தல்.
3. பிறர்க்கு தீங்கு செய்ய நினைத்தல்.
4. முடியாத காரியங்களை நினைத்து. அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமை அடைதல்.

வாக்கினால் அடையும் பாவங்கள்:

1. பொய் சொல்லல். 2. கோள் சொல்லல்
3. புறங்கூறல். 4. வீணுக்கு அழுதல்.

தேகத்தினால் அடையும் பாவங்கள்:

1. பிறர் மனைவியை தழுவுதல்.
2. புசிக்கத்தகாத வேத விரோத ஆகாரங்களைப் (மாமிசம்) புசித்தல்.
3. பிறரை இம்சை செய்தல்.
4. தீங்கு செய்பவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரம் செய்தல்.

Koviloor Digital Library

துன்பங்கள் சேராமல் தடுத்துக் கொள்வது எப்படி?

மனம், வாக்கு, உடலினால் வந்தடையும் முன்சொன்ன 12 பாவச் செயல்களைச் செய்யாமல் பின்வரும் புண்ணியச் செயல்களை செய்து வந்தால் நமக்கு துன்பம் சேராமல் தடுத்துக் கொள்ளலாம்.

மனத்தினால் வரும் புண்ணியங்கள்:

1. அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்.
2. பொறாமை அடையாதிருத்தல்.
3. அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்.
4. தனது மனைவியைத் தவிர வேறு பெண்களைத் தாய் சகோதரிகளாய்ச் சிந்தித்தல்.

வாக்கினால் வரும் புண்ணியங்கள்:

1. பொய் சொல்லாமை.

Koviloor Digital Library

2. கேள்வியுடைமை.
3. இன் சொல்லாடல்.
4. தோத்திரம் செய்தல்.

தேகத்தினால் வரும் புண்ணியம்

அன்னியர்களுக்கு தீங்கு நேரிடுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல். இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.

அறிந்து செய்யும் பாவங்கள்

நாம் 1. மோகத்தாலும் 2. மறதியாலும் 3. அபிமானத்தாலும் 4. அகங்காரத்தாலும் 5. செல்வச் செருக்காலும் 6. தாட்சன்ய உடன்பாட்டாலும் 7. உணவு பற்றியும் 8. புகழ் பற்றியும் 9. வழக்கம் பற்றியும் அறிந்தே பாவச் செயல்களைச் செய்கின்றோம்.

Koviloor Digital Library

அவை நீங்க:

அவ்வாறு அறிந்தே பாவங்களைச் செய்துவிட்டோமே என்று பச்சாதாபப்பட்டுப் பெரியோர்களையடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி; யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களில் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயம் செய்தால் நீங்கும்.

மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயும் உள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாதாபத்துடன் பாவகாரியங்களைச் செய்யாமலும்,

Koviloor Digital Library

பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாமல் செய்யும் பாவங்கள்

நடக்குங் காலத்திலும், நீராடுங்காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் பாவங்கள் நேரிடக்கூடும். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும்.

ACC-NO-44026

அவை நீங்க:

இவைகள் யாவும் தினம்செய்யும் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்து உபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளையின் அறப்பணிகள்

அன்னதானம்

தினசரி சாதுக்கள், பக்தர்கள் மற்றும் ஏழை எளியோர்களுக்கு பசியாற்றுவித்தல் (அன்னதானம்) திருவண்ணாமலை மற்றும் பழனியில் நடைபெற்று வருகிறது.

தொடர்புக்கு : +91 94874 54688

கோசாலை - பசுக்கள் பராமரிப்பு

தொடர்புக்கு : +91 94874 54688

தியான வகுப்புகள்

மாநிலம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் இலவச தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொடர்புக்கு : +91 9952604433

இலவச புத்தகங்கள்

பொதுமக்கள் பயனுறும் வகையில் நற்பண்புகள், நற்குணங்கள், உயர்ந்த நெறிகளை எளிய முறையில் உணர்த்தும் வள்ளல் பெருமானார் மற்றும் பல்வேறு ஞானிகளின் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களை ஆன்மீக விழாக்களில் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த அறப்பணியில் பங்கேற்க விரும்புவோர் தொடர்புக்கு : +91 9952604433

Vallalar Mission Org

Koviloor Digital Library

அருள்திரு. **பாபு சாது** அவர்கள்

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை

பதிவு எண் 885/09

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, கோசாலை கிராமம், வாயு லிங்கம் எதிரில்,
கிரிவலப்பாதை, அடிஅண்ணாமலை (PO).,
திருவண்ணாமலை-606 604.
Cell : +91 94434 89849, +91 99526 04433

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்.,
ரெட்டியாரூர் (PO)., பொள்ளாச்சி-642007.
Cell : +91 99526 04433, +91 95977 19535.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை

கொடைக்கானல் பிரிவு ரோடு, கிரி வீதி, பழனி-624601.
Cell : +91 80723 64761, +91 99526 04433.

என்றும் இறை பணியில் . . .

நம்பிக்கை ! நாணயம் !! கைராசி !!!

பாண்டி ராம் என்றென்றும், உங்களுடன் !

தங்க நகை மாளிகை

* வைரம் * தங்கம் * வெள்ளி * பிளாட்டினம்

225, நேரு வீதி, புதுச்சேரி. Ph. 0413-2260300